## இன்றைக்கு தமிழ்நாட்டில் தேர்தல் வந்தாலும்

# தி.மு.க. அணி நிச்சயம் 200 தொகுதிகளில் வெற்றி பெறும்!

## “சன் நியூஸ்” தொலைக்காட்சியில் ‘கேள்விக்களம்’ விவாதத்தில் –

## பாலச்சந்திரன் மூத்த ஐ.ஏ.எஸ். (ஓய்வு) – பத்திரிகையாளர் டி.ராமகிருஷ்ணன் கருத்து!

சென்னை, டிச.26 –

**இன்றைக்கு தேர்தல் வந்தால் கூட தமிழ்நாட்டில் தி.மு.க. அணி நிச்சயம் 200 தொகுதிகளில் வெற்றி பெறும் என்று சன் நியூஸ் தொலைக்காட்சியில் ‘கேள்விக் களம்’ பகுதியில் பங்கேற்ற – மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி (ஓய்வு) பாலச்சந்திரன் மற்றும் பத்திரிகையாளர் டி.ராமகிருஷ்ணன் ஆகியோர் விவாதத்தில் பேசுகையில் தெரிவித்தனர்.**

‘சன் நியூஸ்’ தொலைக்காட்சியில்,2026 இல் ‘200 தொகுதிகளில் இலக்கு – நெருக்கடி தி.மு.க.வுக்கா? அ.தி.மு.க.வுக்கா?’ என்ற தலைப்பில் நடைபெற்ற ‘கேள்விக் களம்’ விவாத நிகழ்ச்சியில் நெறியாளர் குணசேகரன் கேட்ட வினாக்களுக்கு ஓய்வு பெற்ற ஐ.ஏ.ஸ். அதிகாரி பாலச்சந்திரன், பத்திரிகையாளர் டி.ராமகிருஷ்ணன் ஆகியோர் அளித்த பதில்கள் வருமாறு :-

**நெறியாளர் மு. குணசேகரன்:-** 234 தொகுதிகளில் 200 இடங்களை வெல்வோம் என்பது ஒன்று, Pro incumbency தி.மு.க. ஆட்சிக்கு இருக்கிறது என்று தி.மு.க.வினுடைய செயற்குழுவில் பல மூத்த தலைவர்கள் பேசி இருக்கிறார்கள். Pro incumbency – Anti incumbency அப்படி என்ற ஒன்றை தமிழ்நாட்டுத் தேர்தலுடன் ஒப்பிடுவது என்றால் என்ன சொல்வீர்கள், 200 இலக்கு என்பதை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?

**பாலச்சந்திரன் மூத்த ஐ.ஏ.எஸ். (ஓய்வு):-** இன்றைக்கு தேர்தல் வந்தால் 200 தொகுதிகள் தி.மு.க. அணிக்கு நிச்சயமாக கிடைக்கும் என்பதுதான் உண்மை. அதற்கு நான் காரணம் சொல்கிறேன். இன்றைக்கு, எதிர்க்கட்சிகளின் வாக்குகள் மீதான அதாவது ஆளுங்கட்சிக்கு எதிரான வாக்குகள், இன்றைக்கு பா.ஜ.க.கூட்டணிக்குதனியாகப்போகும், அ.தி.மு.க.கூட்டணிக்குத் தனியாக போகும், விஜய் போட்டி போட்டால் அவருக்குவாக்குகள்தனியாகபோகும்என்றநிலைமை தான் இருக்கிறது.

ஆளுங்கட்சிக்கு எதிரான வாக்குகள் இப்படி பிரிய இருக்கின்ற நிலைமை இருக்கும் போது நிச்சயமாக இன்றைக்கு 200 தொகுதிகள் இலக்கு என்று முதல்வர் அவர்கள் சொல்வது தமிழ்நாட்டில் மக்களின் மீதான நம்பிக்கையின் அடிப்படையில், களநிலவரத்தை சரியாக கணித்துத்தான் முதல்வர் அவர்கள் கூறுகிறார் என்று நான் நினைக்கிறேன்.

இந்த Pro incumbency – Anti incumbency இந்த இரண்டுமே ஒரு அரசுக்கு இருக்கும். ஏன் என்றால் நூறு சதவிகித மக்களும் ஒரு அரசினால் பலன் அடைந்து இருக்க மாட்டார்கள். சில பேர் பாதிக்கப்பட்டு இருக்கலாம். அவர்கள் ஆன்டி இன்கம்பன்சியின் கீழ் வருவார்கள். எப்போது இந்த அரசு மறுபடியும் தேர்தலில் ஜெயிக்கின்ற வாய்ப்பு அதிகரிக்கும் என்றால் ஆட்சிக்கு மக்களின் ஆதரவு என்பது அதிருப்தி என்பதைவிட அதிகமாக இருக்க வேண்டும்.

தி.மு.க. அரசைப் பொறுத்த வரையில் மகளிர் உரிமைத் தொகை கொடுத்தார்கள். அடுத்து ‘நான் முதல்வன் திட்டம்’ கொண்டு வந்தார்கள். அடுத்து அரசு பள்ளி மாணவர்களுக்கு ‘இலவசமாக காலை உணவு சிற்றுண்டி’ கொடுத்துள்ளார்கள். அடுத்து அரசு பள்ளிகளில் படிக்கின்ற மாணவ, மாணவியர் கல்லூரிகளுக்கு போக வேண்டும் என்றால் அதற்கு உதவித் தொகை கொடுத்தார்கள். இவை எல்லாம் நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால், இந்த உரிமைத்தொகையானது எலக்ட்ரானிக்கலில் (வங்கிகள் மூலம்) போய் விடுகிறது. இந்த எலக்ட்ரானிக்கல் மூலம் கொடுப்பதினால் இதில் தவறுகள் நடப்பதற்கான வாய்ப்பு கிடையாது.

அதே மாதரி பெண்கள் இப்போது பேருந்தில் இலவசமாக பயணம் செய்ய முடிகிறது. யாரும் அவர்களிடத்தில் தொந்தரவு செய்ய முடியாது. இதே மாதிரி மாணவர்களுக்கும் அடையாள அட்டை கொடுக்கப்பட்டது. இப்படி பெரும்பாலான மக்கள் தொகை என்பது, மகளிர் என்பது 50 சதவிகிதம் என்பதை மறந்து விட முடியாது. இப்படி பெரும்பான்மையான மக்கள் தொகை, மகளிரில் எல்லாருக்கும் கிடைத்திருக்கிறது என்று சொல்லலாம். மகளிரில் யார் யாருக்கு கிடைக்க வேண்டுமோ அத்தனை பேருக்கும் கிடைத்திருக்கிறது என்பது மிகவும் முக்கியம்.

இப்படி பெரும்பாலான மக்கள் இவர்களால் பலன் அடைந்து இருக்கிறார்கள் என்றால், அவர்கள் ஆட்சிக்கு ஆதரவாக இருப்பார்கள். அதுபோல் அதிருப்தி என்று சொன்னால், இந்திய நாட்டில் உள்ள சாபக்கேடு, அரசு நிர்வாகத்தில் உள்ள இலஞ்ச ஊழல்கள் எல்லா மாநிலத்திலும் இருக்கின்ற மாதிரி இந்த மாநிலத்திலும் கண்டிப்பாக இருக்க வேண்டும். அதனால் சிறு குறு தொழில்கள், அரசிடம் தனிப்பட்ட முறையில் சென்று அரசிடம் உதவியை கோருபவர்களுக்கு சில சங்கடங்கள் நேரும். அப்படிபட்ட சங்கடங்களினால் அரசுக்கு எதிராக திரும்புகின்ற மனநிலை வரும்.

அதனால்தான் சொன்னேன் நூறு விழுக்காடு மக்களிடம் அரசு நல்ல பெயர் வாங்க முடியாது என்று. ஆனால், அப்படியான அரசுக்கு எதிரான எண்ணிக்கை இன்றைக்கு குறைவாக இருக்கின்றது என்பது நிதர்சனம். அதனால் தான் நான் நினைக்கிறேன். இன்றைக்கு தேர்தல் வந்தால் நிச்சயமாக 200 தொகுதிகளில் ஜெயிப்பார்கள்.

2026-இல் என்ன நடக்கும் என்று நீங்கள் கேட்டீர்கள் என்றால், அன்றைக்கு வந்து வேறு வேறு கூட்டணி அமைக்கின்ற முயற்சிகள் நடக்கின்றது. பி.ஜே.பி.யும் அ.தி.மு.க.வும் மறுபடியும் சேர்ந்து வரும் என்று பார்க்கிறார்கள். விஜய் வந்து தி.மு.க.வை மட்டும்தான் திட்டுவேன். அ.தி.மு.க.வை திட்டமாட்டேன் என்று ஒரு விரதமாக வைத்துக் கொண்டிருக்கிறார். இவர்கள் எல்லாம் கூடி என்ன செய்யப்போகிறார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். அந்த சூழ்நிலையில் அது தி.மு.க.விற்கு எதிராக போகும் என்று எந்தக் கட்டாயமும் இல்லை. ஏன் என்றால் முன்பு இருந்த மாதிரி மக்கள் இப்போது இல்லை. என்னென்னமோ பேசிவிட்டு, விஜய் வந்து அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்தார் என்றால் மக்கள் யோசிக்கத்தான் செய்வார்கள். அதற்குப் பிறகு நீட் போன்ற எல்லாவற்றையும் எதிர்த்து விட்டு பி.ஜே.பி.யுடன் கூட்டணி வைத்தார் என்றால் மக்கள் யோசிக்கத்தான் செய்வார்கள். அதனால் இந்த மாதிரியான விஷயங்களால் தி.மு.க.விற்கு சாதகமான சூழ்நிலைதான் நிலவுகிறது.

**நெறியாளர்:** இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் இன்றைக்கு தேர்தல் நடந்தால் தி.மு.க. கூட்டணி 200 இடங்களில் வெற்றி பெறும். எதிர்க்கட்சி அணி என்று ஒன்று இல்லை என்று கூறுகிறீர்கள். இரண்டாவது எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்தால் கூட அது எடுபடுமா? விஜய், அ.தி.மு.க. வுடன் சேர்ந்தால் அது எடுபடாது என்ற ஒரு


நெறியாளர்
மு. குணசேகரன்


மூத்த (ஐ.ஏ.எஸ்.)
பாலச்சந்திரன்


பத்திரிகையாளர்
டி.ராமகிருஷ்ணன்:

கோணத்திலும், பி.ஜே.பி.யும் அ.தி.மு.க.வும் ஒன்றுபட்டு வந்தாலும் அது எடுபடாது என்று ஒரு கோணத்திலும் சொல்கிறீர்கள். ஆட்சிக்கு எதிரான அதிருப்தி என்பது அவ்வளவாக இல்லை. பொதுவாக மக்கள் இரண்டு கோணங்களில் வாக்கு அளிப்பார்கள். ஒன்று இருக்கிற ஆட்சி மீண்டும் வரவே கூடாது என்றும் அவர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற அதிருப்தி; எதிர் அணியில் யார் இருக்கிறார்கள், அப்படி என்பது பற்றி எங்களுக்கு கவலையே இல்லை. இருக்கிற ஆட்சி சிறப்பாக இருக்கிறது. இந்த ஆட்சியே மீண்டும் வரவேண்டும் என்ற மக்களின் ஆதரவு. இது வெறும் திட்டங்களால் மட்டும் வந்துவிடுமா?

**பாலச்சந்திரன்:–** **திட்டங்களால் மட்டுமல்ல, நல்ல பண்பிலும் வரும். அந்த நல்ல பண்பு என்பது இன்றைக்கு நம்முடைய முதல்வருக்கு அதிகமாக இருக்கிறது. இன்றைக்கு இந்திய மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட, அனைத்திந்திய தலைவர்களில் ஒருவர் ஸ்டாலின் அவர்கள் என்பதை தமிழ்நாட்டில் உள்ளவர்களில் யாருமே மறுக்க முடியாது. இந்தியாவில் உள்ளவர்கள் ஏற்கனவே ஏற்றுக் கொண்டார்கள். தமிழ்நாட்டில் உள்ளவர்களால் யாராலும் இதனை மறுக்க முடியாது. அப்படி இருக்கையில் கிரடிபிலிட்டி – அதாவது நம்பகத்தன்மை என்பது பெரிய அளவில் உள்ளது. அதில் யாருக்கும் சந்தேகமே கிடையாது.**

நீங்கள் சொல்வது சரியான பாயிண்ட், வெறும் திட்டங்களை மட்டும் வைத்து செய்துவிட முடியமா என்றால் திட்டங்கள் என்பது மிகவும் முக்கியம். பலனடைந்தவர்கள், மக்கள் தங்களுக்கு தொடர்ந்து பலன் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையில் வாக்களிப்பார்கள். என்பது முக்கியம், அந்த

திட்டங்களின் பலன்களும் முக்கியம். இவர்கள் கொண்டு வந்த எல்லா திட்டத்திலுமே நன்மைகளை குறை கூற முடியாத அளவிற்கு சிறப்பாக இருக்கிறது. மக்களுக்கு தொந்தரவு தராத அளவிற்கு சிறப்பாக இருக்கிறது. அது மிகவும் முக்கியமான பாயிண்ட், அதுவும் தவிர அந்த நம்பகத்தன்மை என்பதை குலைத்திட, இந்த பேனை பெரிச்சாளி ஆக்கி, பெரிச்சாளியை பெருமாள் ஆக்குகின்ற முயற்சிகள் நடக்கும். சில இடங்களில் சரியான விசாரணை நடக்க வில்லை என்கின்ற அதிருப்தி இருக்கும். இன்னும் தீவிர விசாரணை நடத்தப்பட்டிருக்க வேண்டும் என்று இருக்கும். இது தமிழ்நாட்டில் ஒட்டுமொத்தமாக குறையாக கொண்டு போவதற்கான முயற்சிகள் இருக்கும். அந்த நேரத்தில் தி.மு.க.வின் பிரச்சார யுக்திகள் வலுவானதாக இருக்க வேண்டும்.

எந்தவிதமான தவறான பிரச்சாரம் நடந்தாலும் அதனை முறியடிக்கக்கூடிய வலுவான பிரச்சாரம் இருக்க வேண்டும். அடுத்து 2026-க்குள்ளாக உண்மையாகவே ஒரு பிரச்சனை உருவாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இவை எல்லாமே சொன்னேன். இன்றைக்கு தேர்தல் வந்தால் 200 தொகுதிகள் வரும். 2026-க்கு இப்போது நீங்களும் நானும் ஒரே மாதிரி தான் கருத்தைச் சொல்கிறோம். அன்றைக்கு சூழ்நிலை எப்படி இருக்கிறது என்பதை பார்க்க வேண்டும்.

ஆனால் அடிப்படையான காரணிகள் இவர்கள் கொண்டு வந்த திட்டங்களினால் தி.மு.க.விற்கு சாதகமாகத்தான் இருக்கிறது. அதில் எந்தவித சந்தேகமுமில்லை.

**நெறியாளர்:–** இன்னொரு முக்கியமான விஷயத்தில் நீங்கள் சொல்கிற பாயிண்டில் நான் கருதுவது ஒன்று திட்டங்களால் கிடைக்கும் நன்மைகளில் ஒரு நம்பகத்தன்மை, ஒரு குட்வில். எந்த அரசியல் கொள்கைகளுக்காக ஒரு தலைவர் நிற்கிறார் என்பதை பொறுத்து அரசியல் களத்தில் அவர் எடுக்கின்ற நிலைப்பாட்டின் அடிப்படையில் வருகின்ற ஒரு நம்பகத்தன்மை. அந்த நம்பகத்தன்மை மீது உருவாகின்ற ஒரு நல்ல எண்ணம் அப்படி என்பது முதல்வர் ஸ்டாலின் அவர்களுக்கு சாதகமாக இருக்கிறது என்ற கோணத்தை முன் வைக்கிறீர்கள். ஆனால் இன்னொரு முனையில் நான் கேட்க விரும்புகிறேன். தி.மு.க. ஆட்சிக்கு எதிராக பல முனைகளில் விமர்சனங்கள் முன் வைக்கப்படுகின்றது. ஒன்று அ.தி.மு.க. பிரதான எதிர்க்கட்சி, அந்த எதிர்ப்பை முன்னெடுக்கிறது. இன்னொன்று பா.ஜ.க. கட்சி சமூகவலைதளங்களில் வலிமையான பிரச்சாரத்தை விமர்சனத்தை முன் வைக்கிறார்கள். அதற்குப் பிறகு ந.த.க., அதற்குப் பிறகு விஜய், பா.ம.க. இப்படி பலவிதமான கட்சிகள் தளத்தில் வெவ்வேறு பிரச்சினைகளை முன்வைத்து விமர்சிக்கிறார்கள். அது ஒரு திரட்சி ஆகாதா, மக்களிடத்தில் இவை எல்லாம் மேலோங்குவதற்கு பலமுனை தாக்குதல் அப்படி என்ற ஒன்று இந்த நல்ல எண்ணத்தையும், அவருக்கு இருக்கின்ற அந்த நம்பகத்தன்மையை சிக்கலுக்குள்ளாக்கிவிடாதா?

**பாலச்சந்திரன்:** நான் அதனால் தான் சொன்னேன். பொய் பிரச்சாரங்களுக்கு எதிராக வலிமையான எதிர்ப் பிரச்சாரத்தை தி.மு.க. செய்ய வேண்டும். அது ரொம்ப ரொம்ப முக்கியம். ஏன்னென்றால் உதாரணமாக நம்முடைய பிரதமர் சொல்கிறார்; நாங்கள் விவசாயிகளுக்காக என்னென்றும் இருப்போம் என்று சொல்கிறார். அதையே அண்ணாமலையும் சொல்வார். அதற்கு தி.மு.க. ஒரே ஒரு கேள்வி தான் கேட்க வேண்டும். இரண்டு மடங்கு அவர்களுடைய வருமானத்தை உயர்த்துவேன் என்று சொன்னீர்களே, அது என்ன ஆச்சு? விவசாயிகளுக்கு உறுதுணையாக இருப்பேன் என்று சொல்லிவிட்டு விவசாய சட்டத்தை ஏன் காலி செய்தீர்கள், விவசாயச் சட்டத்தை திரும்பவும் ரத்து செய்தீர்கள். ரத்து செய்ததற்குப் பிறகு அந்த விவசாயிகள் மீது போட்ட வழக்குகளை, எப்படிப்பட்ட வழக்கு தேசத்துரோக வழக்கு, அந்த வழக்குகள் என்ன ஆச்சு. இந்தக் கேள்விகள் எல்லாம் கேட்க வேண்டும். ஏன் என்றால் மக்கள் எல்லா வற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும். பல சமயங்களில் ஏதோ தமிழ்நாட்டில் ரொம்ப பெரிய பிரச்சினை இருப்பது மாதிரியும், மற்ற மாநிலங்களில் பா.ஜ.க., மிகத் திறமையாக ஒன்றியத்திலும் ஆளுகின்ற மாதிரியும் ஒரு பிரச்சாரத்தை கொண்டு வந்து வைப்பார்கள். இதற்கு பொய்ப் பிரச்சாரம் செய்ய வேண்டிய தேவை தி.மு.க.விற்கு இல்லை. உண்மையில் என்ன நடக்கிறது என்பதை தி.மு.க. சொன்னாலே போதும். இவர்கள் அம்பேத்கருக்கு எந்த அளவில் மரியாதை கொடுத்து இருக்கிறார்கள் என்பது சமீபத்தில் பார்த்தோம். இதே மாதிரி ஒவ்வொன்றையும் சொல்ல முடியும். சாவர்கார் வந்து எப்படிப்பட்ட உயர் நிலைக்கு கொண்டு செல்லப்படுகிறார். நேரு எப்படிப்பட்ட கீழ் நிலைக்கு, தாழ்நிலைக்கு தள்ளப்படுகிறார். நேரு இந்த நாட்டிற்கு என்ன செய்திருக்கிறார், சர்வர்கர் என்ன செய்தார் என்ற கேள்விகளை எல்லாம் மக்கள் முன்னால் தி.மு.க.வினர் எழுப்ப வேண்டும்.

இப்போது மக்கள் 1962, 1967 இல் இருந்த நிலைக்கு மக்கள் மனநிலை இன்றைக்கு இல்லை. திருவண்ணாமலையில் இருந்து வந்து இங்கே வண்டியில் பழம் விற்றுவிட்டு போகிறார். ஏழாவது எட்டாவது படித்த பையன். ரஜினியின் தீவிர ரசிகன். அவரிடம் நான் கேட்டேன். அப்போது ரஜினி அரசியலுக்கு வருவேன் என்று சொல்லிக்கிட்டு இருந்த நேரம். ரஜினி படத்தோட மற்ற படங்களை பார்ப்பீர்களா என்று கேட்டேன். ரஜினி படத்திலே இருக்கிறதில் மற்ற படங்களில் எதுவெல்லாம் இல்லை என்று சொல்வதற்காக பார்ப்பேன். மற்ற படி ரஜினி படம் தான் பார்ப்பேன் என்றார். அவரிடம் ரஜினிக்கு ஓட்டு போடுவீர்களா என்றேன். நீங்கள் வேற, அவர் காவிரிப் பிரச்சினைப் பற்றி என்ன பேசினார். விவசாயப் பிரச்சினை பற்றி என்ன பேசினார். தலைவர் சினிமாவிற்கு தான் தலைவருங்க. சினிமாவையும் அரசியலையும் போட்டு குழப்பக் கூடாது என்றார். இது எட்டாம் வகுப்பு படித்த ஒருத்தருக்கு இருந்த அரசியல் தெளிவு. இந்த அரசியல் தெளிவு இன்றைக்கு மக்களிடத்தில் எல்லோரிடமும் இருக்கிறது. ஆனால் எல்லோரும் என்ன செய்கிறார்கள்.

விவசாயத்திற்கு ஆதரவாக பழனிச்சாமி பேசினால், விவசாயச் சட்டத்திற்கு ஆதரவாக நீங்கள் ஏன் ஓட்டு போட்டீர்கள் என்ற கேட்டால், அவரிடத்தில் என்ன பதில் இருக்கிறது. நீட் தீர்மானத்திற்கு ஒரு வருடமாக இருந்து அந்த பில் ரிஜக்ட் ஆனது, அதில் குடியரசுத் தலைவர் கையெழுத்து போடவில்லை என்பதை மூடி மறைத்தீர்களே, அப்படி என்று அவரிடம் கேட்டால் என்ன பதில் இருக்கிறது. நீட் தேர்வில் இன்றைக்கு தன்னுடைய நிலைப்பாட்டை தி.மு.க. மாற்றிக் கொள்ளவில்லை. நீட் இருக்கக் கூடாது, ஆனால் அதனை போக்குகின்ற அதிகாரம் எங்களுக்கு இல்லை. அந்த அதிகாரத்திற்காக நாங்கள் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள்.

> **தி.மு.கழகத்திற்கு மட்டும் அவர்களுக்கு இருக்கின்ற மிகப்பெரிய பலம் என்று நான் நினைக்கிறது தேர்தல் சமயத்தில் கொடுத்த வாக்குறுதிகள் அவர்களுடைய அதிகாரத்திற்கு மேற்பட்டது. அதனை அவர்கள் அந்த அளவில் செய்ய முடியாது. ஆனால் அவர்கள் அதிகாரத்திற்குட்பட்ட அனைத்தையுமே அவர்கள் செய்வதற்கு முழு மனதாக முயற்சி செய்கிறார்கள். அதில் பெரும் அளவில் வெற்றி கண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லாதவற்றையும் செய்திருக்கிறார்கள். இந்த பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு கொடுப்போம் என்று சொன்னாரா, இல்லை. ஆனால் இதனை அவர் அடுத்த தேர்தலுக்காக செய்யவில்லை. இதனை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். இது அடுத்த தேர்தலுக்காக இல்லை. இது அடுத்த தலைமுறைக்காகக் கொண்டுவரப்பட்ட திட்டம். இது சாதாரணமான திட்டம் கிடையாது.**

அதனால் இது மாதிரியான விஷயங்களை வைத்து பார்க்கும் போது மக்கள் சில பேர் நினைக்கிற மாதிரி வெறும் திட்டங்களை மட்டும் பார்த்துவிட்டு மக்கள் ஓட்டு போட மாட்டார்கள் என்றால் நம்பகத்தன்மை, நீங்கள் சரியாக சொன்னீர்கள். அந்த திட்டம் அடிப்படையில் என்ன இருந்தது. இவர்களுக்கு ரொம்ப பெரிய நம்பகத்தன்மையை கொடுக்கக் கூடிய திட்டத்தை கொண்டு வந்தார்கள்.

பா.ஜ.க. அரசு விஸ்வகர்மா திட்டம் என்று சொல்லி கொண்டு வந்தார்கள். அவையெல்லாம் பற்றி பேச வேண்டும். தி.மு.க.வினர் கண்டிப்பாக பேசுவார்கள். விஸ்வகர்மா திட்டத்தில் வந்து ஒரு முப்பது தொழிலை தேர்ந்தெடுத்தார்கள். அதனை தேர்ந்தெடுத்து என்ன செய்தார்கள். இந்த முப்பது தொழிலை செய்பவர்களுக்கு நாங்கள் கடன் கொடுப்போம் என்றார்கள். எப்போது நான் குயவன் குடும்பத்தில் இருந்தால் நான் குயவனாக போவதற்கு வந்து கடன் கேட்டால் தான் எனக்கு கடன் கிடைக்கும். நான் நாவிதர் குடும்பத்தில் இருந்தால் நான் நாவிதர் குடும்பமாக போவதற்காகத் தான் எனக்கு கடன் கிடைக்கும். இதனை விட வருணாசரமத்தை அழுத்தம் திருத்தமாக சொல்வது யாரு. ஆனால் இன்றைக்கு கலைஞர் திட்டம் என தி.மு.க. கொண்டு வந்து இருக்கிறது. அதில் என்ன சொல்லி இருக்கிறார்கள். சிறப்பாக, அதில் உள்ள வேற்றுமையை உறுதிப்படுத்தி இருக்கிறார்கள். இதையெல்லாம் செய்தால் மட்டும் போதாது. இதனை மக்களிடத்தில் கொண்டு போய் சேர்க்கவேண்டும். அந்தப் பெரிய பொறுப்பே தி.மு.க.வினர்களின் பேச்சாளர்களுக்கும். ஐ.டி.விங்கிற்கும் இருக்க வேண்டும்.

ஏன் என்றால் பி.ஜே.பி.யின் ஐ.டி. வந்து ரொம்ப ரொம்ப பலமானது. ஏன் என்றால் அது கொஞ்சம் கூட பொய்களை கூச்சமில்லாமல் சொல்லக் கூடிய ஐ.டி. விங் , சனாதனத்தினை எதிர்க்கிறேன் என்று உதயநிதி சொன்னதற்கு இந்து மக்களை கொலை செய்யச் சொல்கிறார் என்று அண்டப் புளுகி விட்டவர்கள் பா.ஜ.க.வின் ஐ.டி. விங். அதனால் தி.மு.க.வினர் சரியாக இருக்க வேண்டும். இதனைத் தான் நான் அழுத்தமாக சொல்லிக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதத்தில் பங்கேற்று பாலச்சந்திரன் மூத்த ஐ.ஏ.எஸ். (ஓய்வு) பேசினார்.

**தொடர்ந்து இந்த விவாதத்தில் பத்திரிகையாளர் டி.ராமகிருஷ்ணன் கூறியதாவது:-**

**நெறியாளர் மு.குணசேகரன்:** முதலமைச்சராக இருக்கக்கூடிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய அந்தஸ்து (Stature) நம்பகத்தன்மை (Credibility) புகழ் (Popularity) இந்த அம்சம் அப்படி என்ற ஒன்று தேர்தல் நேரத்தில் தி.மு.க.விற்கான நல்லெண்ணமாக மாறும் என்று கணிக்கப்படுகிறது. இன்றைக்கு தேர்தல் வைத்தால் திமு.க.விற்கு 200 இடங்கள் கிடைக்கும் என்று இரண்டு கட்சிகளும் தி.மு.கவும் சரி அ.தி.மு.க. 200 என்று ஒரு டார்கெட் வைப்பதை நீங்கள் எப்படி புரிந்து கொள்கிறீர்கள்?

**பத்திரிகையாளர் டி.ராமகிருஷ்ணன்:** அதாவது இப்போது அதிகமான எண்ணிக்கையை குறிக்கோளாக வைத்துக் கொண்டு அவர்கள் நகர வேண்டும் என்று பார்க்கிறார்கள். இது பல கட்சிகளின் யுக்திதான். இந்தத் தொண்டர்களை உற்சாகப் படுத்துவதில் இதனை வைத்துக் கொள்ளலாம். இரண்டாவது சில சிக்னலும் அதில் சொல்கிறார்கள் . இப்போது தி.மு.க.வைப் பொறுத்தவரையில் 184 இடங்களில் 1971 இல் வெற்றி பெற்றார்கள். 184 க்கு மேல் வெற்றி பெற்றால் தான் அது சரித்திர மிக்க வெற்றியாக கருத முடியும். அதுவும் அவர்களுக்கு மனதில் இருக்கிறது. அது ஒரு சாத்தியமா ? என்பதை இப்போது என்னால் சொல்ல முடியாது.

2024 நாடாளுமன்றத் தேர்தல் முடிவின் படி பார்த்தால் 222 இடங்களில் அவர்கள் சட்டமன்றத் தொகுதிகளில் முன்னணியில் இருந்திருக்கிறார்கள். 2024 அது. 2024 ம் 2026 வும் ஒன்றாக இருக்குமா என்பது போகப் போகத்தான் தெரியும். அதனால் அதில் ஒரு பார்ட் இருக்கிறது. முக்கியமாக இதனை நான் ஒரு யுக்தியாகத்தான் பார்க்கிறேன்.

அவர்களுடைய தொண்டர்களை ஒரு உற்சாகப்படுத்த வேண்டும் என்பதற்காக அவர்கள் சொல்கிறார்கள் என்று பார்க்கலாம். 200 இடங்களில் வெற்றி பெறுவது, என்பது தி.மு.க. கூட்டணியின் 200 வெற்றி – அப்படிதான் கணக்கில் எடுத்துக் கொள்கிறேன். அப்படி பார்க்கும் போது தி.மு.க.வில் இருக்கின்ற கூட்டணியில் எந்த விதமான மாற்றங்கள் நடைபெறுமா? நடைபெறாதா? அது கடைசி நிமிடத்தில் முடிவாகும்.

அப்படி மாற்றங்கள் வராத பட்சத்தில் தி.மு.க. இப்போது 165 இடங்கள் என்று நினைக்கிறேன், அது 2026 தேர்தலில் மேலும் 25 இடங்கள் அல்லது 30 இடங்கள் அதிகமாக பெற வேண்டும். இருக்கிறதை தக்கவைத்து கொண்டு மேலும் அதிக தொகுதிகள் பெற அந்த நகர்வுகளை பெற அவர்கள் முயற்சிக்கிறார்கள் . இன்றைக்கு இருக்கின்ற நிலையில் அதனை அவர்கள் நினைக்கலாம். ஆனால் தமிழ்நாட்டு மக்கள் சில சமயங்களில் யோசிக்கிறது; அவர்கள் சிந்திப்பது எல்லாம் விதவிதமாக இருக்கும். அதனால் நாம் எவ்வளவு கணக்கு போட்டாலும் அவர்கள் போடுகிற கணக்கு வேறு விதமாக இருக்கிறது. 1996-2001 தி.மு.க. ஆட்சி. எந்தவிதத்திலும் அதனை சிறப்பான ஆட்சி இல்லை என்று யாராலும் சொல்ல முடியாது. தமிழ்நாட்டில் இருந்தவர்கள் அனைவருக்கும் தெரியும். ஆனால் தோற்று போய்விட்டார்கள்.

ஆனால், அதே மாதிரியான அரசியல் சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறதா என்றால் இல்லை. அந்தக் காலக்கட்டத்தில் நல்ல ஆட்சி புரிந்தார்கள், கட்டமைப்புகளை உருவாக்கினார்கள், சாலைகள் அமைத்தார்கள், கூவம் ஆறு சுத்தப்படுத்துவது போன்ற திட்டங்களை எல்லாம் அப்போது செயல்படுத்தினார்கள். பாலங்கள் கட்டினார்கள், கோ.சி. மணி உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தார். எல்லாமே ஓகே. அமைச்சர்கள் எல்லோருமே திறமையாக செயலாற்றிய காலக்கட்டம் அது. ஆனா அந்த திட்டங்களை அவர்கள் நிறைவேற்றிய பிறகும் அந்தத் தேர்தலில் அதிக தொகுதிகளில் வெற்றபெற முடியவில்லை. அது ஒரு பாயிண்ட். அதனால் கூட்டணியின் பலம் தான் அங்கே முக்கியமானதாக போய் விடுகிறது. இப்போது அந்த மாதிரியான சூழ்நிலை இல்லை. இப்போது இருக்கின்ற தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் பெரிய மாற்றங்கள் வரும் என்று நான் எதிர்ப்பார்க்க வில்லை. அதனால் அவர்கள் இந்த 165 யை 200 ஆக கொண்டு போவது என்பது சாத்தியம் என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

தேர்தல் வரும் போது தான் இந்தக் கூட்டணி மாறப்போகிறதா? என்னென்ன நிலைமை என்பதும், என்னென்ன சிக்கல்கள் வரும் என்பெதெல்லாம் இப்போது தெரியவில்லை. 2004 இல் பல திட்டங்களை யு.பி.ஐ. அரசில் கொண்டுவந்தார்கள். யு.பி.ஐ. மூலமாக திட்டங்களை கொண்டு வந்தார்கள். அது காங்கிரஸ் 200 தொகுதிகளை பெறுவதற்கு உதவியது. அதே மாதிரி 2009 இல் பல திட்டங்கள் யு.பி.ஏ. கவர்ன்மெண்ட் செய்தது. உணவு பாதுகாப்புச் சட்டம் என்று பல திட்டங்களை கொண்டுவந்தார்கள். ஆனால் அந்த யு.பி.ஐ. யால் 2014 இல் வரமுடியவில்லையே. திட்டங்களும், உங்களுடைய சட்டங்களும், நல்ல எண்ணங்களும் கொண்டு செயல்படுத்தினால் கூட மக்கள் தேர்தல் சமயத்தில் உங்களை அளவிடுவது என்பது அவர்கள் வேறு ஏதோ சில காரணிகளை வைத்து இருக்கிறார்கள். அது சரியா, தவறா என்பது வேறு விஷயம். ஆனால் முக்கியமான காரணி இந்த கூட்டணி ஒன்றாக அமைகின்றது. அந்தக் கூட்டணி இப்போது தேவைப்படுகிறது. அந்த கூட்டணியை அவர்கள் தக்கவைத்துக் கொள்வார்களேயானால் தி.மு.க. ஆட்சியை தொடர்கிறது என்பது 165 என்பது 180 ஆகலாம்.

இந்தக் கூட்டணியே தொடருமானால் தி.மு.க. ஆட்சியை தக்கவைத்துக் கொள்வது சாத்தியம் என்றே நான் கருதுகிறேன்.

**பாலச்சந்திரன்:** இவர் நல்ல கருத்தை சொல்லி இருக்கிறார். அதனை நான் ஒத்துக்கொள்கிறேன். ஒவ்வொரு கட்சிக்கென்று வாக்கு வங்கி இருக்கிறது. தி.மு.க.விற்குஎன்று ஒரு வாக்கு வங்கி இருக்கிறது. அதே மாதிரி அ.தி.மு.க.விற்கு என்று ஒரு நிரந்தர வாக்கு வங்கி இருக்கிறது. அதில் இன்றைக்கு குறைந்து இருக்கிறது. காரணம் பா.ஜ.க.வோடு கூட்டணி குறித்த ஒரு உறுதியான நிலைப்பாடை எடுக்காமல் இருக்கிறார்கள். தொண்டர்கள் கலங்குகிறார்கள். பா.ம.க.விற்கு ஒரு வாக்கு வங்கி இருக்கிறது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு ஒரு வாக்கு வங்கி இருக்கிறது. கம்யூனிஸ்ட்களுக்கு இருக்கிறது. இவர்கள் கூட்டணி கொள்கைக் கூட்டணி.

அந்தந்த கட்சிகளின் வாக்கு வங்கி அனைத்தும் அப்படியே தி.மு.க.விற்கு போய் சேரும். இதைத்தவிர அந்த குட் வில் வாக்கு வங்கி இருக்கே. அதாவது நியூட்ரல் வாக்கு வங்கி அந்த வாக்குகளும் இவர்களுக்கே வந்து சேரும். என்னுடைய கணிப்பு என்ன வென்றால் அந்த குட்வில்காக வருகின்ற வாக்கு வங்கி என்பது முன்பு இருந்ததை விட ஐந்து வருடங்களுக்கு முன்பு இருந்ததை விட இவர்கள் பதவிக்கு வருவதற்கு முன்பு போட்ட வாக்குகளை விட இன்றைக்கு இந்த வாக்கு வங்கி அதிகரிக்கும் வாய்ப்பு இருக்கிறது. அதே மாதிரி மற்றவர்களுடைய வாக்கு வங்கிகள் அப்படியே தக்கவைக்கப்படும். ஆனால் நியூட்ரல் ஓட்டுகள். இவர்கள் (அ.தி.மு.க.) தங்களுக்குள் இவ்வளவு பிரிவினை வைத்து இருக்கிர்கள். இப்படி எல்லாவற்றையும் மனதில்வைத்து பார்க்கும் போது நியூட்ரல் ஓட்டுகள் வாக்கு இன்று உள்ள எதிர்க்கட்சிகளுக்கு அதிகமாக கிடைக்காது. அப்படி என்பது என்னுடைய கணக்கு. அந்த அடிப்படையை வைத்துதான் நான் கூறினேன்.

**நெறியாளர்:** எடப்பாடி பழனிச்சாமி கடந்த தேர்தலில் பா.ஜ.க. வாங்கிய ஓட்டைவிட அ.தி.மு.க. ஒரு சதவிகிதம் கூடுதல் வாக்கு வாங்கி இருக்கிறது என்று சொல்கிறார். அ.தி.மு.க. ஓட்டு வங்கி கூடுதலாக இருக்கிறது என்று சொல்கிறார். இது குமாரசாமி கணக்கைவிட மோசமாக இருக்கிறது என்று முதலமைச்சர் தெரிவிக்கிறார். நீங்கள் எந்தக் கணக்கு சரி என்று சொல்லுங்களேன்.

**டி.ராமகிருஷ்ணன்:** பொதுவாக ஒன்று சொல்லி விடுகிறேன். இந்தப்புள்ளி விவரங்களைப் பற்றி ஆங்கிலத்தில் ஒரு வசனம் இருக்கிறது Facts, Figures, lies (உண்மைகள், புள்ளி விவரங்கள், பொய்கள்) என்னைப்பொறுத்தவரையில் புள்ளி விவரங்கள் இதையே காட்டிவிடுமா – இதனை வைத்துக் கொண்டு பிற்காலத்தில் இப்படி போகலாமா? இதனை ஒரு அளவுகோளாக வைத்துக் கொள்ளலாமே தவிர இது அப்படியே ரிப்பீட் ஆகிவிடும் என்று சொல்ல முடியாது.

மக்களின் மனநிலை மாறக் கூடியது. ஒவ்வொரு தேர்தலிலும் ஒரு மாதிரியாக ஓட்டுப் போடுகிறார்கள். தமிழ்நாட்டு மக்களைப் பற்றி கேட்கவே வேண்டாம். அவர்கள் எப்படி சிந்தனை செய்கிறார்கள் என்பது அவர்களுக்குத்தான் தெரியும்.

2014ல் பா.ஜ.க., பா.ம.க., தே.மு.தி.க., ம.தி.மு.க. ஒரு கூட்டணி என அப்போது இருந்தாகள். இன்றைக்கு பா.ஜ.க. தலைவராக அண்ணாமலை இருக்கிறார். அவர்கள் கடந்த மூன்று வருடங்களாக மோதுகிறார். அவர் எவ்வளவுக்கெவ்வளவு முயற்சி செய்ய வேண்டுமோ அவ்வளவு முயற்சி செய்திருக்கிறார். அதனை நாம் யாருமே மறுக்க முடியாது. அவருடைய உழைப்பு தீவிரமாக வேலை செய்திருக்கிறார். 2014க்கும், 2024க்கும் அவர்கள் அதனை விட சதவிகிதம் குறைவாக்கத்தான் பெற்றிருக்கிறார்கள். அதில் சந்தேகமில்லை. ஆனால் மொத்த வாக்காளர் எண்ணிக்கை அதிகமாகி இருக்கிறது. அதனால் குறைவாகத்தான் ஆகும். ஏனென்றால் அந்த அளவிற்கு அதிகமாக போன முறை 75 இலட்சம் ஓட்டுகள் வாங்கினார்கள். இப்போது 79 இலட்சம் ஓட்டுகள் வாங்கி இருக்கிறார்கள். 18.5 சதவிகிதம், இப்போது 18.28 சதவிகிதம் என்ற வகையில் இருக்கிறது.

ஆனால் முதல்வர் சொன்னதில் அவர் சொன்ன ஒரு மைய கருத்து என்னவென்றால். சராசரியாக ஒரு நாடாளுமன்றத் தொகுதியில் அவர்களுடைய (அ.தி.மு.க.) வாக்கு வங்கி குறைந்திருக்கிறது சராசரியாக அப்படி என்று அவர் சொல்லி இருக்கிறார். அதனை நான் ஒத்துக் கொள்கிறேன் குறைந்துதான் இருக்கிறது.

வாக்கு வங்கி குறைந்திருப்பதை பற்றி அ.தி.மு.க. கவலைப்பட வேண்டும். ஒரு சதவிகிதம் ஏறிவிட்டது என்று சொல்வது வந்து ரொம்ப பலவீனமானதாகவே நான் பார்க்கிறேன். ஆனால் கடைசியில் நீங்கள் எவ்வளவு தொகுதிகளில் வெற்றி பெறுகிறீர்கள் என்பதுதான் முக்கியம். சரத்பவார் இப்போது சொல்கிறார் நான் இப்போது அதிகமாக வாக்குகள் அ.தி.மு.க. பெற்றுவிட்டேன். ஆனால் எனக்கு இவ்வளவு தான் வந்து இருக்கு என்று சொல்கிறார். இதே பாயிண்ட் தான் அங்கே நடந்து கொண்டு இருக்கிறது. அதனை விடுங்கள் எவ்வளவு தொகுதிகள் செய்து இருக்கிறீர்கள்? வாக்கு சதவிகிதம் அதிகம் பெற்றீர்களா, வாக்குகள் அதிகம் பெற்றீர்களா?

இதில் 2019-இல் இவர்கள் கூட்டணியில் இருந்தார்கள். 2024 தே.மு.தி.க. மட்டும் தான் கூட்டணி. அதுவும் இல்லாமல் ஓ.பி.எஸ். போயிட்டாரு. அப்போது அவர்களுடைய 3.7 இலட்சம் வாக்குகள் அவர்கள் பெற்று இருக்கிறார்கள். முதல்வர் சொல்கின்ற கணக்கு சரிதான். முக்கியமானது அப்போதைக்கும் இப்போதைக்கும் ஒரு நாடாளுமன்றத் தொகுதியிலும் அ.தி.மு.க.வுக்கு 1.15 இலட்சம் வாக்குகள் குறைந்திருக்கிறது.

இவ்வாறு பத்திரிகையாளர் டி.இராமகிருஷ்ணன் விவாதத்தில் பங்கேற்று பேசினார்.